
# முகிழ்

> **புத்தகம்**
> நூல்களாலான உடலையும்
> எழுத்தாலான உயிரையும் கொண்ட
> விலை மதிக்க முடியாத பொக்கிசம்
>
> ட.சுகன்ஜா
> 10B

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி | சித்திரை - புரட்டாதி -2009 | இதழ் - 2

## கல்லூரி



## கல்லூரி அதிபரின் வாழ்த்துச்செய்தி



இன்றைய கல்விமுறைமை தேர்ச்சி மட்டத்தினை அடிப்படையாகக் கொண்டதாக மாற்றமடைந்துள்ளது. மாணவர்கள் தேடல்கள் மூலம் சுயமாகக் கற்பதற்கு ஆசிரியர்கள் வழிகாட்டிகளாகச் செயற்படுகிறார்கள். உரிய தேர்ச்சியினைப் பெற வகுப்பறைச் செயற்பாடுகள் மாணவர்களுக்கு உதவுகின்றன. பல்துறைகளில் தேர்ச்சியினைப் பெற பாடசாலைகள் களமாக அமைகின்றன. இந்த வகையில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி தன்னை தேடி வரும் மாணவர்களுக்கு சிறந்த களமாக அமைய ஆசிரியர்கள் முழுமையாகப் பணிசெய்கின்றனர். அதன் ஒரு வெளிப்பாடே முகிழ் காலாண்டிதழாகும். மாணவர்களின் ஆக்கங்களையும் கல்லூரியின் செய்திகளையும் தாங்கி வரும் முகிழ் தொடர்ந்து வெளிவரவும் கல்விப்புலத்தில் இதழ் விரித்து மலர்ந்து மணம் பரப்பவும் வாழ்த்துவதோடு எமது தமிழ்த்துறை ஆசான் திரு.ந.குகபரன் அவர்களின் இம்முயற்சியை மனமகிழ்வுடன் பாராட்டுகின்றேன்.

## கல்லூரியின் 80 ஆண்டு வரலாற்றிலே

1929ம் ஆண்டில் சண்டிலிப்பாய் இந்து ஆங்கிலப் பாடசாலை என்ற பெயருடன் அமரர் ப.செகராஜசிங்கம் அவர்களால் இன்றைய சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. அவர் 1940ம் ஆண்டு வரை தானே அதிபராயிருந்து பாடசாலையை நடாத்தினார். திரு.எஸ்.தில்லையம்பலம் அவர்கள் நிறுவுநரின் பின்னர் 1941 முதல் 1954 வரை அதிபராகப் பணியாற்றினார். அதன் பின்னர் 1955 - 1965 காலப்பகுதியில் திரு.P.C.சுப்பிரமணியம் அவர்களும், திரு.BIRCH 1966-1967 வரையிலும், தொடர்ந்து 1968 முதல் 1970 வரை திரு.வை.இராசசுந்தரம் அவர்களும் அதிபர்களாகக் கடமையாற்றினார்கள்.

இவர்களைத் தொடர்ந்து அதிபராக இணைந்து கொண்ட திருமதி.ப.சிவானந்தராஜா அவர்களின் காலத்தில் சண்டிலிப்பாய் அமெரிக்கமிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை, சண்டிலிப்பாய் வாணி நிகேதன வித்தியாலயம் ஆகிய பாடசாலைகள் சண்டிலிப்பாய் இந்து ஆங்கிலப் பாடசாலையுடன் சேர்க்கப்பட்டு சண்டிலிப்பாய் இந்து மகா வித்தியாலயமாக மாற்றப்பட்டு இப்பிரதேசத்தில் உயர்ந்த பணியாற்றும் நிறுவனமாகக் கட்டமைக்கப்பட்டது. திருமதி.ப.சிவானந்தராஜா 1978ல் ஓய்வு பெற்றதன் பின்னர் திரு.கா.வைத்தியநாதஐயர் அதிபராக நியமனம் பெற்றார். இவர் 1985ம் ஆண்டில் இளைப்பாறினார். திரு.செ.அமிர்தலிங்கம். திரு.எஸ்.எம்.மூர்த்தி, திரு.எஸ்.பரராசசிங்கம் ஆகியோர் 1987ம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் அதிபர்களாக கடமையாற்றினார்கள். 1988ம் ஆண்டிலே திரு.சோ.சோமசேகரம் அவர்கள் அதிபரானார். பாடசாலையின் முன்பக்க மதில், மின்சார இணைப்பு குழாய்நீர் விநியோகம் போன்ற அபிவிருத்திகள் இவரின் காலத்தில் முன்னெடுக்கப்பட்டன. திரு.சோ.சோமசேகரம் 1992 இல் ஓய்வு பெற திரு.ச.கந்தசாமி அவர்கள் பதில் அதிபராகக் கடமையாற்றினார். 1993ம் ஆண்டிலே திரு.ச.சிவனேஸ்வரன் அவர்கள் அதிபராக நியமனம் பெற்றார். பௌதீக வளத்தேவைகள் பல நிறைவேற்றியமை, க.பொ.த. உயர்தர வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டமை, 1C பாடசாலையாகத் தரம் உயர்த்தப்பட்டமை, கல்வி மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் உயர்வுகளைப் பெற்றமை, சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டமை போன்ற பல உயர்ச்சிகளின் காரணகர்த்தா திரு.ச.சிவனேஸ்வரன் அதிபர் அவர்களாவார். 2005 ஏப்பிரல் மாதத்தில் திரு.ச.சிவனேஸ்வரன் அவர்கள் இடமாற்றமாகி சென்றபின் திரு இ.ஆனந்தநடராசா பதில் அதிபராக பொறுப்பேற்றார்.

2005 ஆகஸ்ட் மாதத்தில் திரு வ.ஸ்ரீகாந்தன் அவர்கள் அதிபர் பொறுப்பினை ஏற்றுக்கொண்டார். கரப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம் போன்ற பெருவிளையாட்டுக்களில் கடந்த 10 வருடங்களுக்கு மேலாக மாகாணமட்டம் வரை பல முதன்மை வெற்றிகளையும் சிந்துநடைக்கூத்து நிகழ்வில் 2005 முதல் மாகாண மட்ட முதலிட வெற்றிகளும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த. சாதாரணதரப் பரீட்சை, க.பொ.த உயர்தரப் பரீட்சைகளில் தொடர்ச்சியாக அதிகரித்த பெறுபேறுகளும் பல்கலைக்கழக அனுமதி, கல்வியற்கல்லூரி அனுமதி என்பவற்றில் ஒவ்வொரு ஆண்டும் உயர்ந்து செல்லும் எண்ணிக்கையுமாகக் கல்லூரியின் வரலாறு தடம் பதித்து வலுப்பெற்றுச் செல்வது நிறுவுநர், பணி செய்த அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களின் அர்பணிப்பான சேவைக்கு கிடைத்துவரும் உன்னத கைம்மாறாகும். 80 ஆண்டுகள் நிறைவடையும் நிலையில் யாழ்மாவட்டத்தில் சகலதுறைகளிலும் விருத்தியடைந்துவரும் பாடசாலையாக மிளிரும் சண்டிலிப்பாய் இந்துவை உருவாக்கியவர்களின் பாதங்களை பணிந்து போற்றுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகிழ் காலாண்டிதழ்
Tel: 021-2240080, 021-3216462
E-mail:sanhindu@gmail.com

ஆலோசனை : **திரு.வ.ஸ்ரீகாந்தன்**
(முதல்வர்)

**திரு.ஆனந்தநடராசா**
(பிரதி அதிபர்)

**திரு.கு.விமலன்**
(உப அதிபர்)

இதழாசிரியர் : **திரு.ந.குகபரன்**

**தொகுப்பு உதவி**
**1. ட.சிந்துஜா**
**2. சி.ஜீவனா**
(2010 கலை)


சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியின் முகிழ்-2 மாணவர்கள் ஆக்கங்களை தாங்கி கல்லூரிசார் பதிவுகளோடு புலர்கின்றமை மகிழ்ச்சியை தருகின்றது. வாழ்வின் இயங்கு திசையில் செம்மையான வழித்தடத்தில் பயணிப்பதற்கான நம்பிக்கையைத் தருவதில் படைப்பு முயற்சிகளுக்கு கணிசமான பங்கு உண்டு. பல்வேறு இடர்களை சுமந்து நலிவுற்ற வேளைகளிலும் கல்வி என்ற நம்பிக்கை ஒளியைக் கையிலேந்தி வாழ்வு நகர்கின்றமைக்கு படிப்பார்வமும் அடிப்படையாய் உள்ளது. ஆனால் உலக வாழ்வு இயந்திரப்பாங்காக மாறிவரும் இன்றைய சூழலில் வாசிப்பு நாட்டம் குன்றி வருகின்றமையே துயரமான விடயமாகும்.

எதிர்காலத்தின் மலர்ச்சிக்கான அடிப்படையைத் தகவமைப்பதில் மாணவப்பருவம் முக்கியமானதாகும். இப்பருவத்தில் ஆரோக்கியமான கலை இலக்கிய வெளிப்பாடுகளை உள்வாங்கி தவறாக வழிநடத்தக்கூடிய பொழுதுபோக்குகளில் அமிழ்ந்து விடாது மாணவர்கள் விழிப்புடன் செயற்படவேண்டும். இன்றைய சூழலில் நம்பிக்கையைத்தரத்தக்க வகையில் மாணவர்களின் ஆக்கங்களைத் தாங்கி வெளியீடுகள் வெளிவரத் தொடங்கியுள்ளமை நல்ல அறிகுறியாகும். இன்றைய தலைமுறை நேரத்தை ஆக்கபூர்வமாகப் பயன்படுத்த வேண்டும். ஆரோக்கியமான தேடல்களே அறிவை ஆழப்படுத்தும். சமூகப் பொதுவெளியில் உயிர்ப்பான பண்பாட்டுப் பேணுகையுடன் கூடிய கலை இலக்கிய முயற்சிகள் பெருக வேண்டும். கூடவே அதற்கான ஆதரவுத்தளம் அனைவரிடத்திலிருந்தும் வெளிப்படல் அவசியமாகும். நம்பிக்கையைத் துணையாக்கி மவரும் முகிழும் சமுகப்பொறுப்புடன் தன் பயணத்தைத் தொடரும்.



# கல்வளை அந்தாதி பாடிய சின்னத்தம்பி புலவர்

கல்வளை அந்தாதியை இயற்றிய வரகவியான சின்னத்தம்பிப் புலவர், இற்றைக்கு இருநூறு வருடங்களுக்கு முன்னர், ஒல்லாந்தர் இந்நாட்டை ஆண்ட காலத்தில் யாழ்ப்பாணத்து நல்லூரில் வாழ்ந்த வில்வராய முதலியாரென்னும் பிரபுவின் புதல்வராவார். வில்வராய முதலியார் உயர் குடிப்பிறப்பு, கல்வியொழுக்கம், செல்வம், செல்வாக்கு, அதிகாரம் முதலிய குணங்களோடும், நற்செயல்களோடும் கூடியவர். இம் முதலியாருடைய கல்வித்திறமையையும் நற்குண நற்செய்கை, செல்வம், செல்வாக்கு என்னும் இவைகளை அறிந்த ஒல்லாந்த அரசினர் தேச வழமையை எழுதுவதற்கு அக்காலத்தில் வாழ்ந்த பன்னிருவரை ஒரு சபையாகக்கூட்டி அச்சபைக்கு வில்வராயரை தலைவராக நியமனஞ் செய்தனர்.

இவ்வாறு அறிவிற் சிறந்த வில்வராய முதலியாருடைய புத்திரராகிய சின்னத்தம்பிப்புலவர் சிறுபராயத்திற் கல்வி கற்றலை அலட்சியஞ் செய்து விளையாட்டிலேயே தம் சிந்தை செல்லப் பெற்றிருந்தார் என்றும், இங்ஙனம் மாடு மேய்க்குஞ் சிறுவனுடன் கலந்து தெருவில் விளையாடிக் கொண்டு நிற்குஞ் சமயத்தில் இவரது தந்தையாராகிய முதலியாரைக் காணும்படி இந்தியாவிலிருந்து இங்கே வந்த தமிழ்ப் புலவரொருவர் "முதலியாருடைய வீடு எவ்விடத்தே" என்று இவரைக் கேட்க அப்பொழுது 7 வயதுப் பராயமுடையவராகிய இவர் வசனத்தில் அப்புலவருக்கு விடை சொல்லாமல்.


பொன்பூச்சொரியும் பொலிந்த செழுந் தாதிறைக்கும்
நன்பூ தலத்தோர்க்கு நன்னிழலாம் - மின்பிரபை
வீசு புகழ் நல்லூரான் வில்வராயன்கனக
வாசலிடைக் கொன்றை மரம்" எனவிடை அளித்தார். அதன் பின்பே இவர் வரகவியென்பது உலகோர்க்குப் புலனாயிற்று. இவர் வரகவி யென்பதற்கு ஆதாரமாக இன்னும் பல ஐதீகங்கள் உண்டு. இப்புலவர் பால்யத்திற் கல்வி கற்காது விளையாட்டிலேயே மனஞ் செல்லராய்த் திரிவதைக் கண்ட தகப்பனார் பலமுறை புத்தி புகட்டியும் கடிந்தும் தண்டித்தும் இவரைத் திருத்த முயன்று இயலாமை கண்டு அவரை தம் வீட்டை விட்டு அகற்றிவிட்டார். தந்தையார் இவ்வண்ணஞ் செய்தாரேனும் "பொல்லாத சேயெனின் தாய்தள்ள நீதியோ புகலிடம் பிறிதுமுண்டோ" என்றவராய் இவர் தாயார் தம் பிள்ளையை முதலியார் இல்லாத போது வீட்டிற்கு வந்து உணவு உண்டு விட்டுப் போகும் படி இரகசியமாக ஒழுங்கு செய்திருந்தார்.

இப்படித் தினந் தோறும் களவாக வீட்டுற்கு வந்து தாயிடம் உணவு உண்டு சென்ற இவர் ஒரு தினம் கூரையின் உட்புறத்தே ஒரு வெள்ளேடு செருகி இருப்பதைக் கண்டு அதனை எடுத்துப் பார்த்தபோது அது பிதாவின் கையெழுத்தில் ஒரு அந்தாதிச் செய்யுளில் இரண்டு அடிகள் மாத்திரம் வரையப்பட்டிருப்பதைக் கண்டு மற்றைய இரண்டு அடிகளையும் எழுதி செய்யுளை பூரணப்படுத்தி ஏட்டினை பழையபடி செருகி விட்டு விளையாடச் சென்றுவிட்டார். அன்று சிறிது நேரஞ் செல்லத் தம் வீட்டிற்கு வந்த முதலியார் தாம் பாடிக்குறையில் வைத்த செய்யுளை நிரப்பும் படி அந்த ஏட்டை எடுத்துப் பார்த்த போது ஈற்றடி இரண்டும் தாம் எண்ணியிருந்ததினும் பார்க்க அதிக சொற்சுவை, பொருட்சுவை மிக்கதாக நிரப்பப்பட்டதை அற்புதங்கொண்டு "இங்கு யார் நான் இல்லாத நேரத்தில் வந்தார்." என்று தம் மனைவியாரை வினவ அவர் சிறிது யோசித்துவிட்டுப் பின்னர் "உங்கள் மகனைத் தவிர எவரும் இங்கே வரவில்லை" என்று தெரிவிக்க முதலியார் அடங்கா மகிழ்ச்சியடைந்து தன் மகனை கூப்பிடுவித்து அன்பு பாராட்டி வித்தை கற்பித்து வந்தார். நமது புலவர் வரகவியாயிருந்ததோடு மாத்திரமமையாது இலக்கண இலக்கியங்களைச் சந்தேக விபரீதமற ஆசானிடத்திற் கிரமமாகப் பயின்றுள்ளாரென்பது அவர் இயற்றிய நூல்களை ஆராய்வார்க்குப் புலப்படும்.

சின்னத்தம்பிப் புலவரவர் இயற்றிய நூல்கள் மறைசெயந்தாதி, கல்வளை அந்தாதி, கரவை வேலன்கோவை, பறாளைவிநாயகர் பள்ளு என்னுமிவைகளாம் இவைகளில் இரண்டாவதாகவுள்ள கல்வளையந்தாதி சண்டிலிப்பாயிலுள்ள புராதன தலமாகிய கல்வளைப்பதியில் எழுந்தருளிய விநாயகர் மீது பாடப் பெற்றதாகும். சிவசம்புப் புலவரவர்களின் மாணாக்கரும் இயற்றமிழ்ப் போதகாசிரியருமாகிய வல்லவை ச.வைத்தியலிங்க பிள்ளையவர்கள் இவ்வந்தாதிக்கு ஒரு நுட்பமான உரையெழுதிப் பல வருடங்களுக்கு முன்னர் அச்சிடுவித்து வெளிப்படுத்தியுள்ளார். அந்த உரையையே பழைய உரை என்னும் பெயரோடு சென்னை எஸ். அநவரதவிநாயகம் பிள்ளையவர்கள் பரிசோதித்து "ரிப்பன்" அச்சியந்திரசாலையில் அச்சிடுவித்து வெளியிட்டுள்ளார். சின்னத்தம்பி புலவருடைய இயற் பெயர் செய்துங்க மாப் பாண முதலி என்பதாகும். பின்பு இவர் புலவர் வரிசையில் இடம்பெற்றார். விநாயகர் அருளால் சிறுவயதிலிருந்தே வரகவியாக விளங்கினார். சின்னத்தம்பிப் புலவர் இளமையிலேயே பாடும் ஆற்றல் கைவரப்பெற்றவர். என்பது தோன்ற அவர்க்கு அருட்கவி, வரகவி எனப்பல பெயர் உண்டு. கல்வியறிவு, ஈசுவரபக்தி, தமிழ்புலமை என்பவற்றால் தலை சிறந்து விளங்கி ஏறக்குறைய கி.பி 1787ஆம் ஆண்டிலே இவ்வுலக வாழ்வை துறந்தார்.

**ந.துஷாந்தி**
**2011 கலை**


## புராதன நாணயங்கள் கண்டெடுப்பு



**தொல்பொருட்களை பேணவேண்டியது அனைவரதும் கடமையாகும். எம் மத்தியில் இருந்து எமது தனித்துவத்தை வெளிப்படுத்திய பொருட்களில் பல உரிய பேணுகைத் தன்மை இன்மையால் அழிந்து போனமை பெருந்துயரமாகும். அண்மையில், எமது கல்லூரி மாணவர்களான அ.ஜோன்ஜிப்பிரிகோ, நா.சபேஸ் ஆகியோர் ஈழத்தின் 13ம் நூற்றாண்டு காலப்பகுதியில் வெளிவந்த இரு நாணயங்களை கண்டெடுத்தனர். இம்மாணவர்களின் தேடல் ஆர்வம் பாராட்டுக்குரியதாகும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கவிதைகள்

**கல்வி**
கசப்பான வேரையும்
இனிப்பான கனிகளையும் கொண்ட
அதிசய மரம்.

**ஆசான்**
அன்புடன் பண்பையும்
அறிவுடன் பரிவையும் தரும்
அட்சய பாத்திரம்.

**தாய்**
தன்னை உருக்கி
எம்மை உயிர்ப்பித்த
இறைவனுக்கு பதிலான அனுப்பப்பட்ட
நடமாடும் தெய்வம்.

**பூக்கள்**
ஒரு நாள் வாழ்வைக் கொண்டாலும்
சிரித்துக் கொண்டே உதிரும்
திருப்தித் தேவதைகள்.

**மழை**
வறண்ட மண்ணைக் குளிர்மைப் படுத்த
வானம் அனுப்பி வைக்கும்
சிறிய அன்பளிப்பு.

**நிலா**
பளிங்கு போன்ற முகத்துடன்
நீல வான வீதியில்
நடை பயிலும் பெண்.

**பள்ளிப் பருவம்**
சின்னச் சண்டைகள்
செல்லக் கோபங்களுக்கிடையில்
சாதி மதம் பாராமல் பழகும்
மறுபடியும் பெறமுடியாத
இனிய அனுபவங்களைப் பெறும் காலம்.

**நண்பர்கள்**
எம் மனதின் சோகங்களை
இறக்கி வைக்க
இறைவன் அனுப்பி வைத்த
தோள்கள்.

**நட்பு**
ஒரு நாளில் வாடும் பூக்களின்
பூங்கா வனத்தில்
எம் மனதில் எதேச்சையாக
மலரும் வாடா மல்லிகை.

**வாழ்க்கை**
இன்ப துன்பங்களைச்
சுற்றி அமைக்கப்பட்ட
வட்டச் சாலை

**பணம்**
மனித உயிருக்கு
நிகராக மதிக்கப்படும்
மனித உடல் போன்ற
நிலையற்ற பொருள்.


**முகம்**
மனதின் அசைவுகளையும்
தற்போது பல உருவங்களையும்
பிரதி பலிக்கும் கண்ணாடி.

**சீதனம்**
திருமணம் என்ற பெயரில்
சமைந்த பெண்
சமைக்கப்படும்.
சீர் கெட்ட தனம்.

**மனிதன்**
நிலையற்ற உடலுடன்
பல முக மூடிகளை அணிந்து கொண்டு
நடமாடும் ஆறறிவு படைத்த
அற்ப ஜீவன்.

**சமாதானம்**
யுத்த மெனும் சாவியினால் மட்டுமே
திறக்க முடியும் என மானிடம்
நினைக்கும்
கறள் படிந்த பூட்டைக் கொண்ட
சிறைச்சாலை.

**ட.சுகன்ஜா**
**தரம் 10B**



## சண்டிலிப்பாய் இந்துவின் "தூரிகை நர்த்தனம்"

"செய்கையே சிறந்த கல்வி" என்பது எமது கல்லூரியின் மகுட வாசகம். இதனை நிரூபித்துக் காட்டியது "தூரிகை நர்த்தனம்" எனும் சித்திரக் கண்காட்சி. இக் கண்காட்சி 18-06-2009 அன்று கல்லூரியில் நடாத்தப்பட்டது. கல்லூரி அதிபர் திரு.வ.ஸ்ரீகாந்தன் அவர்கள் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைக்க, தெல்லிப்பளைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு.ச.கைலாசநாதன் அவர்கள் கண்காட்சியை ஆரம்பித்து வைத்தார். எதிர்பாராத வகையில் கலந்து கொண்ட கோட்டக்கல்விப் பணிப்பாளரின் வருகை எம்மைப் பூரிப்படைய வைத்தது. சித்திரபாட சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் திருமதி.மதியழகி இளமுருகன் அவர்களும் கலந்து சிறப்பித்து கண்காட்சியை மெருகூட்டினார். கலையின்பமே நிலையின்பம் எனக் கூறத்தக்க வகையில் காட்சிப்படுத்தப்பட்ட அனைத்துமே பார்த்தோரை வியக்க வைத்தது. இவ்வோவியக் கண்காட்சியின் பதிவுகள் ஒவ்வொரு மனங்களிலும் நர்த்தனம் பெறுவது நிச்சயம் என்றார் ஆசிரிய ஆலோசகர் அவர்கள். கல்லூரி அதிபர் அவர்கள் பல கதை சொல்லும் ஓவியங்களையும், பார்த்தவுடன் கவர்ந்திழுக்கும் சிற்பங்களையும் படைத்த மாணவச் செல்வங்களை மகிழ்ந்து பாராட்டினார்.

மன உறுதியுடன் வாழ்க்கையில் எந்நிலைக்கும் முகங்கொடுக்கும் ஆற்றலை உடைய ஆக்கசிந்தனை, ஆக்கத்திறன் முதலிய திறன்களாலும், மனப்பாங்குகளாலும் நிறைவான மாணவர்களை உருவாக்குவதே ஒவ்வொரு கல்வி நிறுவனங்களினதும் பணியாகும். இதற்காகவே சண்டிலிப்பாய் இந்துவானது "கல்லூரி ஏற்றுள்ள பிரதேச மாணவர்களை நிகழ்கால, எதிர்கால வாழ்வுக்குத் தயாராக்குதல்" என்ற நோக்கக் கூற்றின் அடிப்படையில் இயங்கி வருகின்றது. கல்வியின் பிரதான நோக்கமே நிறைவான பிரஜையை உருவாக்குவதாகும். சித்திரக் கலைப்பாடத்தில் அவ்வாறான நிறைவான பிரஜையை உருவாக்குவதில் அநேக கருமங்களைச் செய்ய முடியும். அத்துடன் வரலாறு, உளவியல், மனவெழுச்சி, அம்சங்களில் சமநிலையை ஏற்படுத்துவதற்கு வாய்ப்பளிக்கக் கூடியதுடன் இரசனை விருத்தி போன்ற சுய திறன்களையும் சித்திர பாடத்தின் மூலம் அடைந்து கொள்ள முடியும் ஆக்கத்திறன் சார்ந்த வாழ்க்கையை உருவாக்க முடியும். இதற்கு தூரிகை நர்த்தனம் களம் அமைத்துக் கொடுத்தது.

கருத்து வெளிப்பாட்டுச் சித்திரங்கள், அலங்காரச் சித்திரங்கள், சுவரொட்டிச் சித்திரங்கள், நிலைப்பொருட் கூட்டச் சித்திரங்கள், ஒட்டுச் சித்திரங்கள், தரைக்காட்சிச் சித்திரங்கள், விளம்பரச் சித்திரங்கள் என பல்வேறு வகையான சித்திரங்களும், களிமண், சீமெந்து, சவர்க்காரம், பிளாஸ்ரர், பரீஸ் பவுடர் என்பவற்றினால் ஆக்கப்பட்ட மனித மெய்நிலைச் சிற்பங்களும், கழிவுப் பொருளாக்கங்கள் போன்ற பல்வேறு விதமான படைப்புக்களும் கண்காட்சியை அலங்கரித்தன. குருத்தோலை அலங்காரங்கள் பார்த்தோரை கவர்ந்திருந்தன.

தூரிகை நர்த்தனத்திற்கு மகுடம் சூட்டிய அம்சம் என்ன வெனில் இலங்கையில் இதுவரை காலமும் வெளிவந்த தாள் நாணயங்கள் காட்சிப் படுத்தப்பட்டமை ஆகும். 1942 ல் வெளி வந்த ஐந்துசதம், பத்துச்சதம் ஆகிய நாணயத்தாள்கள் தொடக்கம் இற்றை வரையான ஒருரூபா, இரண்டுரூபா, ஐந்துரூபா, பத்துரூபா, இருபதுரூபா, ஐம்பதுரூபா, நூறுரூபா, இருநூறுரூபா, ஐந்நூறுரூபா, ஆயிரம்ரூபா, இரண்டாயிரம்ரூபா ஆகியவற்றில் படிமுறையாக வெளிவந்தவை யாவும் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன். அத்துடன் இன்று பாவனையிலிருந்து அழிந்து கொண்டிருக்கும் பித்தளையிலான அலங்காரப் பொருட்கள், பூச்சாடிகள், தாம்பாளங்கள், நகைப்பெட்டி, செம்பு, குடம், வெற்றிலைத்தட்டம், வார்ப்பு வேலைப்பாடுகள் போன்ற பலவும் காட்சிப் படுத்தப்பட்டமை கண்காட்சியின் தனித்துவமான அம்சமாகும்.

திரு.பொ.தயாளன்
[ஆசிரியர்]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "சில நேரங்களில் சில மனிதர்கள்"



மனிதர்கள் ஆயிரம் உண்டு
அதில் நல்லவரும் உண்டு
தீயவரும் உண்டு....
வார்த்தைகளால் ஆறுதல் தந்து
வாழ வைப்போரும் உண்டு
வார்த்தையாலே இதயத்தை
கீறி வதைப்போரும் உண்டு...
துன்பமென்று வந்து விட்டால்
தோள் கொடுக்கும்
நண்பரும் உண்டு
நம் துன்பத்தில் சுகம் தேடும்
சில நயவஞ்சகரும் உண்டு
முன்னேற்றம் கண்டு
மெய்யாகவே சந்தோஷிக்கும்
உறவுகளும் உண்டு
வாழவும் விடாமல்
சாகவும் விடாமல்
எரிக்கின்ற....
முயல் தோல் போர்த்திய
முள்ளம் பன்றிகளும்
உண்டு.....

சி.சரண்யா
11B

## சமாதானம்



சமாதானம் என்பது ஐந்தெழுத்து
அது தான் வாழ்வின் உயிரெழுத்து
விலை மதிக்க முடியாத சமாதானமே
உனக்கு உருவம் உண்டா கூறுதியோ?.

சமாதானம் இல்லாத இந்த ஊரினிலே
நிம்மதியாக வாழ்ந்தவன் யாரம்மா?
சமாதான அருமை தெரியாத யாரும்
உலகினிலே உண்டோ கூறுதியோ?.

தொட்டுவிடும் தூரத்தில் சமாதானம்
இல்லை அதை பெற்று விட வழி கூறாயோ?
நாளை சமாதானத்திற்காக
இன்று அத்திவாரம் இடாயோ?.

சமாதானம் என்னும் கோளினிலே
பறக்க எனக்கொரு வரம் தாராயோ!
எமது தமிழ்த் தாயகத்தில் அவலம் நின்று
சமாதானம் நிலைக்க வழி கூறுதியோ?.

நா.அஸ்வினி
தரம்- 10B

## வறுமை

அடுப்பில் வேகுவது
அரிசி என்றாலும்
விறகாய் எரிவது
ஏழையின்
எலும்புகள் தான்
விறகுகளின் விலை
ஏற்றம் என்பதால்



ந.துஷாந்தி
தரம் 2011 A/I

## முகிழ்



யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி புதிதாக காலாண்டு இதழாக முகிழ் இதழை வெளிக் கொணர்ந்தமை மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். இவ் இதழானது மாணவர்களது எழுத்தாற்றலையும் ஆளுமையையும் திறன்களையும் தூண்டும் களமாக அமைவதுடன் கல்லூரி சமூகச் செயற்பாடுகளை பதிவு செய்யும் வகையிலும் அமைந்துள்ளது. மாணவர்களின் வளர்ச்சிக்கு களம் அமைத்துக் கொடுப்பது கல்லூரி அவ்வகையில் கலை இலக்கிய சமூக இதழான முகிழ் மாணவர்களின் வளர்ச்சியை தூண்டும் களமாக அமைந்துள்ளது. இவ்இதழ் தொடர்ந்து மலர்ந்து வாசம் வீசும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

## அரிச்சந்திரன் நாடகம்

ஆண்டு தோறும் கல்வி வளர்ச்சிக்காகவும் மாணவர்களின் திறன் வளர்ச்சிக்காகவும் தமிழ் தினப்போட்டியானது நிகழ்த்தப்படுகின்றது. அவ்வகையில் திறந்த பிரிவுப்போட்டியின் கீழ் நடாத்தப்படும் சிந்து நடைக் கூத்துப் பிரிவில் எமது பாடசாலை தொடர்ந்து நான்கு வருடங்களாக வெற்றியீட்டி வருவது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். 5வது ஆண்டாக நடைபெற்ற சிந்து நடைப் போட்டியில் நானும் பங்குபற்ற வாய்ப்பு கிடைத்தது அளவில்லா மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். இன்றைய கால கட்டத்தில் நவீன நாடகங்கள் முக்கியம் பெறுவதனால் கூத்து முறையானது மருவி வருகின்றது. எனக்கு முதல் முதலில் இந்த வருடமே கூத்தில் பங்கேற்றிய அனுபவம் கிடைத்தது. நாடக பாடம் படிக்கும் எனக்கு இக்கூத்தானது இலகுவான ஒன்றாகவே காணப்பட்டது.

2009ம் ஆண்டு அரிச்சந்திரன் கதையினையே கூத்தாக பழகினோம். கூத்தை அண்ணாவிமார்களே பழக்குவர். ஆனால் எமக்கு எமது பாடசாலை ஆசிரியையும், பழைய மாணவியும் தமது கூத்து அனுபவத்தை வைத்து சிறந்த முறையில் எம்மை வழிப்படுத்தினர். இதன் போது நாம் அனைவரும் ஒற்றுமையுடனும் ஒன்றாகவும் தொழிற்பட்டு சிறந்த முறையில் பழகினோம். ஆண் பாத்திரத்தை பெண்களே ஏற்று மிகச் சிறப்பாக நடித்தனர். ஆயினும் வலய மட்டத்தில் 2ம் இடமே கிடைத்தது. இது எமக்கு பெரும் மனத் தாக்கத்தை ஏற்படுத்தியது. இவ்வருடம் தோல்வியை பெற்ற நாம் இனிவரும் காலங்களில் இவ்வாறான போட்டியில் மனம் தளராது விடா முயற்சியுடன் செயற்பட்டு வெற்றியீட்டுவோம் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

❀❀❀ ❀❀❀ ❀❀❀

## தமிழ் மக்களும் புலம் பெயர்வும்

ஈழத்தமிழர்கள் இன்று உலகெங்கும் வாழ்கின்றனர். அன்று தொட்டு இன்று வரை தமிழ் மக்கள் புலம் பெயர்ந்து தான் தமது வாழ்வை நகர்த்துகின்றனர். ஏனெனில் ஸ்திர மற்ற அரசியல் நிலைமை. இனக்கலவரம். தொழில் தேடல் போன்ற காரணங்களுக்காக மேற்கு நாடுகளுக்கு புலம் பெயர்ந்து சென்றனர். இன்று தமிழர் இல்லாத நாடே இல்லை என்று கூறத்தக்க வகையில் தமது சொந்த நாட்டை விட்டு இன்னொரு நாட்டின் குடி மக்களாக வாழ்கின்றனர். இது ஒரு புறம் இருக்க தமிழ் மக்கள் சொந்த நாட்டுக்குள்ளேயே இடம் பெயர்ந்து அகதி வாழ்க்கை வாழ்கின்றனர். "கல்லெறிபட்ட காகக் கூட்டம் போல" தமிழ் மக்கள் சிதறடிக்கப்பட்டு நிரந்தர இருப்பிடமின்றி புலம் பெயர்ந்து அகதி வாழ்க்கை வாழ்கின்றனர்.

"யாழ் நகரில் என் பையன்
கொழும்பில் என் பொண்டாட்டி
வன்னியில் என் தந்தை
தள்ளாத வயதினில்
தமிழ் நாட்டில் என் அம்மா ...
என்ன நம் குடும்பங்கள்
காற்றில் விதிக்குரங்கு கிழித்தெறியும்
பஞ்சுத் தலையணையா?.

என்ற வ.செ.ஜெயபாலனின் கவிதையானது தாம் பிறந்து. தவழ்ந்து வாழ்ந்த மண்ணை விட்டு தமது உறவுகளை விட்டுப் பிரிந்து நிம்மதியற்ற வாழ்க்கை வாழும் புலம் பெயர் மக்களின் ஏக்கத்தைப் பிரதிபலிப்பதாகவும். புலப்பெயர்வு மூலம் அவர் பெறும் துன்பத்தை உணர்த்துவதாகவும் அமைகின்றது.

எது எப்படி இருப்பினும் சொந்த நாட்டுக்குள்ளே நிம்மதியின்றி. நிரந்தர இருப்பிடமின்றி அகதி வாழ்க்கை வாழ்வது என்பது மிகவும் கவலைக்குரிய விடயமாகும். புலம்பெயர்வதனையே வாழ்க்கைப் போராட்டமாக கொண்டு வாழ்க்கை வாழும் தமிழ் மக்களுக்கு என்று தான் விடியல் பிறக்கும்???

செ.கார்சிகா
A/L 2010



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2006ம் ஆண்டு "கலைவாரிதிப் பட்டம்" பெற்ற "வைரமுத்து சிவபாலன்" அவர்களுடனானதோர் நேர்காணல்

யாழ்ப்பாணம் என்னும் நன்நகரில் தொட்டிலடி என்னும் சிற்றூரில் தனது பாதத்தினைப் பதித்த வைரமுத்து சிவபாலன் அவர்கள் எளிமையான ஒரு மனிதர். கலைப்புலமையும், கலைஞர்களோடு நெருங்கிய பிணைப்புக் கொண்டவர். நாடகம் எழுதுவதையும் அதில் நடிப்பதையுமே தன் தவமாகக் கொண்டு செயற்பட்ட கலைஞர். தமிழக சினிமாக் கலைஞர்களோடும் இணைந்து நடித்த நடிகர். தனது கலைத்துவத்தால் "கலைவாரிதி " எனும் பட்டத்தையும் தனதாக்கியவர். சமூகசேவையாளர்..... இத்தகைய நிறைந்த சிறப்புக்களைக் கொண்ட கலைஞர் "முகிழுக்கு" வழங்கிய ஒரு நேர்காணல்)



நேர்கண்டவர்
சி.சோபனா (2010 கலை)

**1. உங்களது பள்ளிக் காலம் குறித்து ............**

எனது பள்ளிக் காலம் பற்றிக் குறிப்பிடுவதாயின் ஐந்தாம் வகுப்பு வரை யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் கல்வி கற்றேன். அதன் பின்னர் A/L வரை ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் தான் படிப்பை மேற்கொண்டேன்.

நான் எனது 13 வது வயதில் தான் முதன் முதலில் நாடகத்தில் நடித்து மேடையேறினேன். இக் கலைத்துறை வாழ்க்கைக்கு வித்திட்டதும் இந் நாடகம் தான். இந் நாடகத்தை மேடை ஏற்ற உதவி பங்காற்றியவர் மு.சிவாநந்தம் தான். இந் நாடகம் யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியிலே தான் மேடையேற்றப்பட்டது.

**2. உங்களது கலை வளர்ச்சியில் குடும்பத்தின் பங்களிப்பு.........**

குடும்பப் பங்களிப்பு என்று பார்த்தால் பெரிதாக ஒன்றும் குறிப்பிட முடியாது. எனது அப்பா ஒரு காவல்துறை அதிகாரி. அவரிற்கு பெரியளவில் கலையில் ஈடுபாடு இல்லை என்று தான் கூற முடியும். இக் கலை வளர்ச்சிக்கு எனது தனித்துவமான முயற்சி தான் இவ் உயர்ச்சிக்கு வித்திட்டது.

**3. நீங்கள் கலைத்துறையில் அறிமுகமானது பற்றிக் குறிப்பிட முடியுமா?**

கலைத்துறைக்கு நான் அறிமுகமாகியது எனது 13 வது வயதில் மு.சிவாநந்தம் அவர்களால் மேடையேற்றி நடிக்கப்பட்ட நாடகம் தான். கோவலன் கண்ணகி நாடகத்தில் கோவலனாக நடித்துப் பாராட்டு வாங்கியமை தான் கலைத்துறையின் அறிமுகத்திற்கு மூல காரணமாக அமைந்தது.

**4. கலைப் பயணத்தில் மறக்க முடியாத நினைவு.....**

மறக்க முடியாத நினைவு என்று பார்த்தால் கூறுவதற்கு நிறைய இருக்கின்றன. நான் கொழும்பிலுள்ள சரஸ்வதி மண்டபத்தில் "தேரோட்டி மகன்" என்ற நாடகத்தில் துரியோதனனாக நடித்ததைப் பார்த்து எனக்கு சினிமாவில் நடிப்பதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது. மற்றது இலங்கைத் தயாரிப்பான "நெஞ்சுக்குள் தெரியும்" எனும் திரைப்படத்தில் நான் வில்லனாக நடித்தேன். அப்பொழுது நாவற்குழிப் பாலத்தில் ஒரு காட்சி எனக்கும் கதாநாயகனுக்கும் இடையில் ஒரு சண்டை அதில் இருவரும் சண்டை பிடிக்கும் போது நான் தவறுதலாக பாலத்தின் வெளியே விழுந்து விட்டேன். இதனை அவர்கள் தத்ரூபமாக ஒரு காட்சியாகவும் அமைத்து விட்டார்கள். இன்னும் சொல்லப்போனால் மேயர் சுந்தர்ராஜன், சரத்பாபு, நாகேஸ் ஆகியோருடன் ஒன்றாகச் சேர்ந்து படம் நடித்தது மறக்க முடியாதது. இவ்வாறு கூறிச் சென்றால் இன்னும் பல நிகழ்ச்சிகளை விபரிக்க முடியும்.

**5. தங்களது பொது வாழ்க்கை பற்றி.........**

பொது வாழ்க்கையில் பல விடயங்களைச் சொல்ல முடியும். நான் ஒரு சமாதான நீதவானாகவும், வலி தென் மேற்குப் பிரதேசத்தின் மத்தியஸ்தர் குழாத்தின் தவிசாளராக கடந்த 2006 இருந்து செயற்படுகிறேன். மேலும் சங்கானை பட்டின அபிவிருத்தி தலைவராகவும், சங்கானை மருத்துவமனை அபிவிருத்தி சபையின் செயலாளராகவும் விளாவெளி இந்து மயானத்தின் அபிவிருத்தி சபைத் தலைவராகவும், சங்கானை பலநோக்கு கூட்டுறவுச் சங்க பொதுச் சபை உறுப்பினராகவும் செயற்படுகின்றேன். இவை தான் என் பொது வாழ்க்கை பற்றி குறிப்பிடத்தக்கதாய் அமைந்திருக்கிறது. இவற்றை செய்வதனால் எனக்கு ஒரு பூரண திருப்தி ஏற்படுகிறது.

**6. எமது யாழ்ப்பாணத்தின் இன்றைய கலைப் போக்கு குறித்து நீங்கள் கூற விரும்புவது...........**

இன்றைய கலைப்போக்கு என்ற அடிப்படையில் யாழ்ப்பாணத்தைப் பற்றி மட்டும் கூற முடியாது. எல்லா இடங்களிலும் கலைத்துறையில் நவீனத்துவமே உள்வாங்கப்படுகிறது. இவ்வாறு நவீனத்துவத்தைப் பயன்படுத்துவது நாகரிகமாக இருக்கலாம். ஆனால் அதை உடனடியாக ஒருவரால் புரிந்து கொள்ள முடியாது. அடிப்படையிலேயே இலகு படுத்தி தான் மேல் கொண்டுபோக முயற்சி செய்ய வேண்டும்.

எங்களுடைய கலைத்துறையாளர்கள் நாடகத்தினை இந்திய திரைப்படத்திற்கு ஒப்பிடுகின்றனர். இதனால் நாடகத்துறை முதன்மை பெற முடிவதில்லை. அத்துடன் இந்தியா போன்று திரைப்படம் தயாரிக்கும் தன்மையும் இங்கு இல்லை. வெளிநாடுகளில் திரைப்படம் தயாரிக்க அரச ஆதரவு உண்டு. ஆனால் தமிழ் நாடகத்துறைக்கு அவ்வாறு ஒரு முயற்சி யாரும் செய்ய முன்வரவில்லை. இதுக்கெல்லாம் எமது நாட்டுச் சூழலும் ஒரு வகையில் காரணமாக அமைகிறது.

**7. நீங்கள் நடித்த இந்தியத் திரைப்படம் பற்றி......**

நான் இரண்டு படம் இந்திய தயாரிப்பில் நடித்தேன். இரண்டிலும் வில்லன் பாத்திரம் தான் எனக்கு வழங்கப்பட்டது. " உயர்ந்த உறவுகள் ", "அன்றொரு நாள்" இதில் உயர்ந்த உறவுகள் வெளிவந்தது. "அன்றொருநாள்" வெளிவரவில்லை. அத்தோடு இலங்கையின் "வாடைக்காற்று" என்னும் படததிலும் நடித்திருக்கிறேன். இலங்கையில் தான் கூடுதலான படங்களில் நடித்திருக்கிறேன்.

**8. தங்களது அண்மைக்கால செயற்பாடுகள் பற்றி......**

அண்மைக்கால செயற்பாடு என்றால் நான் எழுதி தயாரித்து நடித்த பொலிசி (கொள்கை) என்ற நாடகம் 30 நாடகத்திற்குள் முதலாவதாக வந்தது. அரச அதிபரிடம் இருந்து பாராட்டும் கிடைத்தது. இவை வலிதென்மேற்கு கலாசார பேரவையினால் நடாத்தப்பட்டது. இதில் என்னுடன் என் மகனும் நடித்தார். அத்தோடு மேலும் பல நாடகங்களை உருவாக்கி நடிக்க முயற்சி செய்து கொண்டு இருக்கிறேன்.

**9. வானொலி சேவையில் பணியாற்றியது பற்றி......**

வானொலியில் பணியை நான் முழு நேர வேலையாகச் செய்யவில்லை. பகுதி நேரமாகத் தான் செய்து வந்தேன். 1980 1983 வரை தான் பணியாற்றினேன். சானா, K.M.வாசகர், பி.விக்கினேஸ்வரா ஆகியோர் பணியாற்றிய காலப்பகுதியிலே தான் அறிவிப்பாளர், வானொலி நாடகத் தயாரிப்பாளர், வானொலி நாடக நடிகராகப் பணியாற்றினேன்.

**10. நீங்கள் எமது சமூகத்திற்கு கூற விரும்புவது..............**

ஆம்! இன்றைய கால கட்டத்தில் நாடகத்தின் வளர்ச்சிக்கு மிகப் பாரியளவிலான பாதிப்பு இருக்கிறது. இந்நிலை மாறவேண்டும் எனில் அனைவரிடத்திலிருந்தும் கலைக்கான ஆதரவு பெருக வேண்டும் என்பதே எனது அவா ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர்ப்போட்டியில் பிரதம அதிதியாக வலிகாமம் கல்விவலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு.மு.நடராஜா அவர்களும் சிறப்பு அதிதியாக வலிதென் மேற்கு பிரதேச செயலக விளையாட்டுத்துறை உத்தியோகத்தர் திரு.எஸ்.சதீஸ்குமார் அவர்களும் அதிபர் உள்ளிட்ட ஏனையோரும் நிகழ்வை ஆரம்பித்து வைக்கும் வேளையில்



D.S.I கம்பனியால் நடாத்தப்பட்ட கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் மாவட்ட மட்டத்தில் 12 வயதிற் வயது பெண்கள் பிரிவு 3ம் இடத்





கொழும்பு மாவட்ட சாரணர் கிளையின் 46 வது ஜம்போறி நிகழ்வு விகாரமாதேவி பூங்காவில் 14-08-2009 நடைபெற்ற போது எமது கல்லூரியில் இருந்து ஆசிரியரும் மாணவர்களும்.



கடந்த 26.03.2009 அன்று எமது கல்லூரியில் நடைபெற்ற பெண்குருளைச் சாரணர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வில் காங்கேசன் துறை மாவட்ட ஆணையாளர் திரு.ரவீந்திரனும் திருமதி.திவாகரனும் கலந்து கொண்டு மாணவிகளுக்குச் சின்னம் சூட்டினர்.




26-06-2009
விஞ்ஞான கண



மாணவர்களின் உடற் சுகாதாரத்தினை மேம்படுத்தும் வகையில் கல்லூரியில் சுகாதாரக் கழகம் 12.06.2009 அன்று ஆரம்பிக்கப்பட்டது. இதில் வலிகாமம் தென்மேற்கு சுகாதாரப்பிரிவு உத்தியோகத்தர் அவர்கள் கலந்து சிறப்பித்தார். அந்நிகழ்வில்.......





புலமைப்பரிசில் சித்தியடைந்து உயர்புள்ளி பெற்ற மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ் 18-03-2009 அன்று நடைபெற்றது. பிரதம விருந்தினராக வலி.தென்மேற்கு செயலாள் திருமதி.பு.சிவலிங்கம் அவர்கள் கலந்து சிறப்பித்தார். இந்நிகழ்வில் உயர்புள்ளி பெற்ற மாணவனுக்கு ஆசிரியர்கள் ஈருருளி ஒன்றை அன்பளிப்புச் செய்தனர்.

# பதிவுகள்



சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் இன்ரறக்ற் கழகம் 15.05.2009 அன்று ஆரம்பிக்கப்பட்டது. அந்நிகழ்வில் ஓய்வுபெற்ற அதிபர் திரு.அ.பஞ்சலிங்கம் அவர்கள் உள்ளிட்ட விருந்தினர்கள் கலந்து கொண்டனர்.



தரம் 5 இற்கு உட்பட்ட மாணவர்களின் ஆக்கங்களைத் தாங்கிய "வைகறை" சஞ்சிகையின் வெளியீட்டு நிகழ்வில்

"முகிழ் சஞ்சிகை" வெளியீட்டு நிகழ்வில்....




18-06-2009 அ
நர்த்தனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வயதிற்குட்பட்ட ஆண்கள் அணி 1ம் இடத்தையும். 18 வயது பிரிவினர் 2ம் இடத்தினையும் 15
இடத்தையும் பெற்றுக் கொண்டது.




எமது கல்லூரியில் இவ்வருடம் கூடைப்பந்தாட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இவ்வணியினர் வலய மட்டத்தில் 2ம் இடத்தை பெற்றுக்கொண்டனர்.



2009 அன்று கல்லூரியில் நடைபெற்ற
ன கண்காட்சியின் போது......



கல்லூரியின் மாணவ முதல்வர்களுக்கான சின்னஞ்சூட்டும் நிகழ்வில்....



எமது கல்லூரியில் ஆங்கில தின நிகழ்வானது 14.07.2009 அன்று பவளவிழா மண்டபத்தில் நடைபெற்றது. இதில் மாணவர்களின் குழு நிகழ்ச்சியின் போது



நிகழ்வு
லாளர்
பற்ற





நவராத்திரி தினத்தை முன்னிட்டு கல்லூரியின் இந்து மாமன்றத்தினரால் நடாத்தப்பெற்ற பூமாலை கட்டுதல். கோலமிடல், தோரணம் பின்னல் ஆகிய போட்டிகள் நடைபெற்றன.





அன்று கல்லூரியில் நடைபெற்ற "தூரிகை
ணம்" சித்திரக்கல காட்சியின் போது





போரினால் இடம் பெயர்ந்து முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவும் வகையில் ஒரு தொகை உணவுப் பொருட்கள் கல்லூரிச் சமூகத்தால் யாழ்.றோட்றிக் கழகத்தினூடாக 07.05.2009 அன்று வழங்கப்பட்டது. இக்கையளிப்பின் போது



பொருளாதார ரீதியாக நெருக்கடிகளை எதிர்நோக்கும் மாணவர்களுக்கு உதவி வழங்கும் நிகழ்வு 29.06.2009அன்று கல்லூரியில் நிகழ்ந்த வேளையில்.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசுமையான நினைவுகளோடு...

ஆழவேரூன்றி உறுதியான விழுதுகளோடு, பரந்து வளர்ந்திருக்கும் கல்லூரித்தாயின் நிழலிலே பதின்மூன்று வருடங்கள் கல்விப்பசியைப் போக்கி இளைப்பாறி விலகிச் செல்லும் காலகட்டத்தில் இருக்கிறோம். பதின்மூன்று ஆண்டுகளில் கல்லூரி எமக்கு கல்வியை மட்டும் ஊட்டிவிடவில்லை. இலை மறை காயாக இருந்த எம் விளையாட்டுத் திறமைகளையும் ஏனைய திறமைகளையும் கண்டறிந்து இரத்தினத்தை எவ்வாறு பட்டை தீட்டி ஒளிர வைப்பார்களோ அதே போல எம் திறமைகளையும் ஒளிரவைத்துள்ளனர்.

சிகரத்திலிருக்கும் எம் இலக்குகளை அடைவதற்கு ஏணிப்படிகளாய் அறிவையும், பண்பையும் கலந்து உறுதியாக மிக அவதானத்துடன் ஒவ்வொன்றாக இணைத்து எமை எல்லாம் அதிலேற்றி அழகுபார்க்கும் எம் கல்லூரி அதிபரினதும், ஆசிரியப்பெருந்தகைகளினதும் அர்ப்பணிப்பிற்கும், உயரிய சேவைக்கும் ஈடு இணை இல்லை அவர்களது, உழைப்புக்கு நாம் செய்யும் கைம்மாறு எம் இலக்குகளை அடைவதேயாகும்.

எம் கல்லூரித்தாய் எம்மை வளர்த்து விட்டதோடு தானும் ஓர் உயரிய வளர்ச்சியை அடைந்துள்ளாள். நாம் தரம் ஒன்றில் கல்லூரியில் இணைந்த போது, இரு சிறிய கட்டடங்களுடன் சிறிய நிலப்பரப்பில் அமைந்திருந்த கல்லூரி இன்று வண்ணமிகு பூஞ்செடிகளிடையே நாலாபுறமும் கட்டடங்கள் சூழ நடுவே விளையாட்டு மைதானத்துடன் மிக விசாலமான பரப்பில் அமைந்திருப்பதோடு, கல்வி, விளையாட்டுத்துறை, ஏனைய இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் பல முன்னனிப்பாடசாலைகளைப் பின்தள்ளிப் புகழின் உச்சியிலே இருக்கிறாள்.

யா / சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியின் மாணவர்கள் எனப் பெருமையுடன் கூறிக்கொள்ளும் நாம். இன்னும் சிறிது காலத்தில் கல்லூரியின் மாணவர்கள் என்ற உயரிய அந்தஸ்திலிருந்து ஒருபடி கீழிறங்கி விடுவோம் என நினைக்கையில் இதயம் ஒரு கணம் ஸ்தம்பித்து விடினும் மறுகணம் சண்டிலிப்பாய் இந்துவின் பழைய மாணவர்கள் எனப்பெருமிதம் கொள்வோம் என்கையில் இதயதுடிப்பு சீராகிறது.

சு.தேவகி
A/L 2009 Com

---

# கவிதைகள்

## வெண்கட்டி

வெள்ளை வெள்ளை வெண்கட்டி
வெண்மையான வெண்கட்டி
உன்னில் பல நிறமுண்டு
அழகான வெண்கட்டி
ஆசிரியர் வகுப்பில் வந்தவுடன்
எழுத உதவும் வெண்கட்டி
உன்னைப் போல மகத்தான
சேவை ஆற்றுபவர் வேறு யார்.

ந.லிபிகா
தரம் -8B


---

## அன்புத் தாய்

ஈரைந்து மாதங்கள் - சுமந்து
ஈன்று எம்மை வளர்த்தவள்
உதிரத்தை உரமாக்கி
பாசத்தை ஊட்டியவள்
சுமையென்று எண்ணாமல்
சுகமென்று நினைத்தவள்
ஊண் உறக்கம் மறந்து எம்மை
உயிரைப் போல காப்பவள்
பேணி வளர்த்திட்ட எம்மில்
பேரின்பம் அடைபவள்.

நி.கஜேந்தினி
தரம் -10B

## மதுவை மறந்திடு



கவலை மறக்க போதை எதற்கு
கைவசம் மருந்து அதற்கு இருக்கு
தவறு செய்வதை இனி நீ நிறுத்து
தருவேன் உனக்கு நல்ல கருத்து

போதை கொண்டால் கவலை தீருமா
போடா! அதனால் வலியும் மாறுமா
மேதை என்றா உன்னை நினைத்தாய்
பேதை நீ தான் விசமே குடித்தாய்.

மதுவில் நீயும் சுகமா அடைந்தாய்.
மடையா நீயோ நோயால் உடைந்தாய்
உதவும் நன்மை மதுவில் இல்லை
எனவே உனக்கு அதுவே தொல்லை

குடித்து இன்பம் சேர்த்தாயா?. உன்
குடும்பம் தள்ளாடு வதைப் பார்த்தாயா?.
குடியைக் கெடுக்கும் குடி? அல்லவா?.
குடியை மறக்க வழிதான் சொல்லவா?.

உனக்கு உள்ளது ஆயிரம் சொந்தம்
உறவாடிப் பழகு அதுவே ஆனந்தம்!
மனத்தால் நீயும் சிறந்திட வேண்டும்.
மதுவை இனி நீ மறந்திட வேண்டும்.

சி.நிஷாந்தினி
கலை 2010

## சுதந்திரம்

கால மகளே
இனியாவது
சமாதானத்தை பிரசவி
எங்கள் இறுதி
மூச்சையாவது சந்தோஷமாய்
விடுவதற்கு

## இலவசம்

தோன்றுவதற்கு அனுமதிப்பத்திரம் பிறப்பு
செல்வதற்கு அனுமதிப் பத்திரம் இறப்பு

## பேனா

ஊமையாக உருவாக்கப்பட்டதால்
தினம் தினம் பலரிடம்
சரித்திரம் கூறி
கண்ணீர் சிந்தும் நண்பன்

## கண்ணீர்

வானத்தின் முகில்கள் இன்றி
இதயத்தின் விரிசல்களால்
பொழியும் சிறுமழை.

## மேகங்கள்

நிலையின்றி நிஜமின்றி
இருப்பிடமின்றி அலையும்
அகதிகள்.

## அகதிமு(கா)கம்

சீதை
சிறை வைக்கப்பட்டாள்
இராவணனால் நாங்களும் தான்
இராவணர்களால்
கவரப்படாமலேயே
கைதியாகினோம்.
அசோகவனத்திலில்லை
அகதி முகாம்களில்

## நதிகள்

கல்மனம் கொண்ட
கற்பாறைகள் நடுவில்
தற்கொலை செய்யும்
தற்கொலைதாரிகள்

ம.கார்த்திகா
கலை 2010



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியக்க வைக்கும் கிரேக்கம்

கிரேக்கர்களின் கலை, கலாசார சம்பிரதாயங்களே கிரேக்க நாகரீகத்தின் முக்கிய இலட்சணங்களாகத் திகழ்கின்றன. ஜனநாயகத்திற்கு வித்திட்டவர்கள் என்ற பெருமை இவர்களையே சாரும். கிரேக்க கலை வளர்ச்சி (கி.மு.1100-300) மூன்று காலங்களில் குறிப்பிடப்படுகின்றனர். கேத்திர கணிதயுகம் (கி.மு.117) வரையான காலப்பகுதியையும் பெறிக்ளியன் யுகம் (கி.மு.75) வரையான காலப்பகுதியையும் கெபெனிஸ்ரிக்யுகம் (கி.மு 5க்கு பின்னரான) காலப்பகுதி எனவும் குறிப்பிடப்படுகின்றது. கிரேக்கர்கள் வானசாஸ்திரம், விஞ்ஞானம், உடற்கல்வி, நுண்கலை போன்றவற்றில் மிக்க தேர்ச்சி பெற்றவர்களாகத் திகழ்ந்தார்கள். இவற்றில் வானசாஸ்திரத்திற்கு ஒரு முக்கிய இடமுண்டு. அதுமட்டுமில்லாது கட்டடக்கலையை நன்கு கற்றுத் தேர்ந்தவர்களான கிரேக்கர்கள் அழகிய வீடுகளையும், தேவாலயங்களையும், விளையாட்டு மண்டபங்களையும் கட்டினர்.

கிரேக்கர்கள் மரம், சலவைக்கல், பெண்டெலிக்கஸ் மலை, பளிங்குக்கல், கற்றூண்களை அமைப்பதற்கேற்ற கல்வகைகள் உள்ளிட்ட பலவற்றைப் பயன்படுத்தி உன்னதமான கலைப்படைப்புக்களை உருவாக்கியுள்ளனர். இக் கலையானது கி.மு. 520 கி.மு. 620 இற்கும் இடைப்பட்ட காலகட்டங்களிலேயே வளர்ச்சி பெற்றது. கி.மு. 480கி.மு 650 இற்கும் இடைப்பட்ட காலம் " கிரேக்கத்தின் புராதன யுகம் " எனக் கருதப்படுகின்றது. கற்களாலும், உலோகத்தாலும் சிலைகளும், சிற்பங்களும் இக்காலகட்டத்திலேயே வடிவமைக்கப்பட்டன. ஆறாம் நூற்றாண்டின் பின்னரே கிரேக்க சிற்பங்கள் உன்னத நிலையை அடைந்தன. மற்றும் அடெமானிக், டொசிக் கலைகளைப் பின்பற்றியும் மேலைத்தேய கலைப் பாணியிலும் கட்டடங்களை உருவாக்க கிரேக்க சிற்பிகள் அனுமதிக்கப்பட்டனர். அப்பலோ, சீகோட் போன்ற வெண்கலச் சிலைகள் இக்கால கட்டத்தில் உருவாகின. கீழைத்தேய கட்டடக்கலையையும் உள்வாங்கிய "ஷரியன்டலய் சின் யுகம்" ஆக இதனைக் கருதுகின்றனர். கி.மு.500கி.மு. 400 ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலமானது கிரேக்க கலைத்துவத்தின் முன்னேற்ற யுகமாகும். இக்கால கட்டத்திலேயே "மய்ரன்" எனும் அற்புதமான சிற்பி தோன்றினார். என்பதும் இவரால் செதுக்கப்பட்ட பரிதி வட்டம் வீசுபவன் என்னும் சிலையானது உலகப்பிரசித்தி பெற்றது என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும். அத்தோடு டொறிக், அயோனிக், கொறிந்தியன் என்னும் மூவகைத் தூண்களும் இவ் கிரேக்க கலை வரலாற்றில் முக்கிய பங்கை வகிக்கிறது.

கிரேக்க கட்டடங்கள் எகிப்தியக்கலை போன்ற விசேட சிறப்பியல்புகளை கொண்டவை. பொறெய்பம் தேவாலயம், டெமிரா் தேவாலயம், அப்பலோ தேவாலயம், பாதினன் தேவாலயம் என்பன இதற்கு எடுத்துக்காட்டாகும் கட்டடங்களின் பொருட்டு மரங்களும், நீலத்திற்கு அண்மித்த வெள்ளை நிறக்கற்களும், மினுக்கம் கொண்ட வெள்ளைக்கற்களும் உபயோகித்துள்ளனர். அலங்காரத்தின் பொருட்டு யானைத்தந்தமும் வெண்கலமும் உபயோகித்துள்ளனர். இத்தேவாலயங்களுள் அக்றோ பொளிஸ் என்னும் மலையில் காணப்படும் பாதினன் தேவாலயம் குறிப்பிடத்தக்கதாகும். இங்கு காணப்படும். மூவகைத்தூண்களும் தலை, பாதம் என்பன ஒன்றுக் கொன்று வேறுபட்டவை இத்தேவாலயத்துக்கு டொறிக் மரபுத்துண்களே பயன்படுத்தப்பட்டுள்ளன. கிரேக்க கட்டடங்கள் மிக விசாலமானவையாக இல்லாவிடினும் விசேட கலைப்பண்புகளையும் அலங்கார அமைப்புக்களையும் கொண்டமைந்துள்ளது. கிரேக்க கலைஞர்கள் சுதந்திரமாக விடப்பட்டமையால் புதிய எண்ணக் கருக்களையும் நுட்பங்களையும் ஆக்கங்களில் சிறப்பான கோட்பாடுகளையும் கடைப்பிடித்தனர்.

கிரேக்க கட்டடங்களுள் கிரேக்க கடவுளுக்காக அமைக்கப்பட்ட மண்டபங்கள் முக்கிய இடத்தை வகிக்கின்றன. அவர்களின் ஒவ்வொரு நிகழ்வினையும் நினைவு கூறும்முகமாக தூண்கள் அமைக்கப்பட்டுள்ளன. இத்தூண்களில் பெரும்பாலானவை விளையாட்டுக்களை நினைவு கூரும் முகமாக உருவாக்கப்பட்டவையாகும். கிரேக்கத்தின் மிகப் பழமையான கட்டடக்கலை வடிவம் "டொறிக்" ஆகும்.

கிரேக்க சிற்பக்கலையானது ஆரம்பத்தில் எகிப்திய கலைச்சாயலை கொண்டமைந்ததாக காணப்பட்டது. சிலைகள் விறைப்புத்தன்மை, சமனிலை அற்ற தன்மை, கரடுமுரடான தன்மை, அங்க சலனங்கள் எவையும் இன்றி காணப்பட்டன. இதற்கு உதாரணமாக நிகன்றா சிலையைக் குறிப்பிடலாம். கி.மு 600 அளவில் கிரேக்க கலை மாற்றம் கொண்டதாக உருவெடுத்தது எனலாம். ஹலனிஸ்ரிக் யுகம் சிற்பக்கலையின் பொற்காலமாகக் கருதப்படுகின்றது. இக்காலத்திலேயே அபூர்வமான கலைப்படைப்புக்கள் பல படைக்கப்பட்டுள்ளன. சிலைகளின் அளவுப்பிரமாணம், இயற்கைத்தன்மை, சலனம் கொண்ட சிலைகள் படைக்கப்பட்டன. கிரேக்க சிலை ஆக்கங்களாக வீனஸ், கேமிஸ்சும் டைனீசியசும், லாகூன், வயோதிபப்பெண்வியாபாரி, அதினாசிலை போன்றவற்றை எடுத்துக்காட்டாக குறிப்பிடலாம். இக்காலத்திலேயே மய்ரன், பொலக்ளிரஸ், ஸ்கோபஸ், பிரக்சிடெல், லிசியஸ் போன்ற கலைஞர்கள் பலர் கிரேக்கத்தில் சிற்பங்கள் பலவற்றை உருவாக்கினார்கள்.

கிரேக்க கலை வரலாற்றில் கட்டடக்கலையும் சிற்பகலையும் பெரும் பங்கைப் பெற்றுள்ளபோதும் மிகப்பழைய காலந்தொட்டு சித்திரக்கலைகளிலும் இதற்கு பல ஆதாரங்கள் கிடைத்துள்ளன. கி.மு6ம் நூற்றாண்டிலிருந்து நிர்மாணிக்கப்பட்ட மட்பாண்ட சித்திரங்கள் மூலம் கிரேக்க சித்திரக்கலையின் வளர்ச்சியை அறியக்கூடியதாக உள்ளது. கிரேக்கர்கள் வீடு, யுத்தக்களம், பொதுக்கட்டடங்கள் போன்றவற்றிலும் சித்திரங்களை வரைந்து அழகு படுத்தியுள்ளனர். தேவாலயகட்டடங்களில் செதுக்கப்பட்ட சிற்பங்களையும் இயற்கையாக வர்ணம் தீட்டி அலங்கரித்தனர். தமது தனி இரசனைக்காகவும், அழகுக்காகவும் அலங்காரத்தின் பொருட்டும் பல்வகைப்பட்ட மட்பாண்டங்களை உருவாக்கி அவற்றால் வீடுகளையும் கட்டடங்களையும் அலங்கரித்தனர். உபயோகத்தின் பொருட்டும் பல வடிவமைப்புக்களில் மட்பாண்டங்கள் உருவாக்கப்பட்டன.


இவற்றை அலங்கரிப்பதன் பொருட்டு கறுப்பு, சிவப்பு வர்ணங்களால் வடிவங்களையும், வெள்ளை வர்ணத்தால் பின்னணிகள் தீட்டப்பட்டமையும் கறுப்பு நிற பின்னணியில் மலர்க்கொடி, எருது, அன்னம், குதிரை போன்ற வடிவங்களால் அலங்கரித்ததுடன் மனித வடிவங்களையும் அலங்காரத்தின் பொருட்டு உபயோகித்தமையும் ஆண் வடிவங்களுக்கு கருஞ்சிவப்பு வர்ணமும் பெண் வடிவங்களுக்கு வெள்ளை வர்ணமும் தீட்டப்பட்டுள்ளமை சிறப்பம்சமாகும். யுத்தம், யுத்ததலைவர், சமயதலைவர் போன்ற உருவங்களும் வரையப்பட்டுள்ளன.

நா.சுபேஸ்
கலை 2010

## இலக்கண நூல்களும் அதன் ஆசிரியர்களும்

| | |
|---|---|
| தொல்காப்பியம் | - தொல்காப்பியர் |
| நன்னூல் | - பவநந்தி முனிவர் |
| வீரசோழியம் | - புத்தமித்திரனார் |
| நேமிநாதம் | - குணவீரபண்டிதர் |
| இலக்கணக்கொத்து | - வைத்தியலிங்கத்தேசிகர் |
| தொன்னூல் விளக்கம் | - வீரமாமுனிவர் |
| அடிப்படைத் தமிழ் இலக்கணம் | - எம் ஏ நுஃமான் |
| இலக்கணச் சந்திரிகை | - சுன்னாகம் குமாரசாமிப்புலவர் |
| இலக்கணச் சுருக்கம் | - ஆறுமுகநாவலர் |
| இலக்கணவிளக்கச் சூறாவளி | - சிவஞான முனிவர் |
| செந்தமிழ் இலக்கண விளக்கம் | - பண்டிதர் நாகலிங்கம் |

## நூல் அறிமுகம் – நடுகை



நடுகை இதழின் மூன்றாவது இதழ் ஜுலை 2009ல் வெளிவந்துள்ளது. இச்சஞ்சிகையில் காலத்தை வென்ற கவிஞரான மறைந்த இ.முருகையன் அவர்களின் வாழ்க்கை வரலாறும், "சித்தாந்த சார்பொன்றின் ஆத்ம கீதம்" எனும் கட்டுரையும் வெளிவந்துள்ளது. இவ் இதழில் கவிதை உருவாக்கும் முறை பற்றியும் சுகன்யா, சனாதனா, நிறஞ்சனா, திசாந்தினி போன்றோரின் கவிதைகளும் இடம் பெற்றுள்ளன. இத்தகைய சிறப்பு வாய்ந்த இச்சஞ்சிகையானது அம்பலம் குழுமத்தால் வெளியிடப் படுகின்றது. மிகக் குறைவான விலையில் (5ரூபா) பெற்று அனைவரும் படித்து உச்ச பயனைப் பெறுங்கள்.

த.தேவதர்மிளா
கலை 2011



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவனயீனம்

-சிறுகதை-



வண்டுகள் பூவுடன் இணையும் அந்த சுகந்தமான காலைப் பொழுதில் ஹரி பல்கலைக்கழகம் செல்ல ஆயத்தமாகிக் கொண்டிருந்தான். அப்போது அவனது தாயாரான பூமகள் "என்ன ஹரி வெளிக்கிட்டாயா. சாப்பாட்டு பார்சல் முன் மேசையில் இருக்கு எடுத்திட்டுப்போ. இண்டைக்கு ஏதோ எக்சாம் என்று சொன்னியே" என்றாள் ஹரி "ஓமம்மா அதிருக்கட்டும் நீங்க இண்டைக்கு எப்பிடியாவது ஹொஸ்பிற்றலுக்குப் போயிட்டு வாங்கோ" என்றான் ஹரி.

சரி மகன். அப்பாவும் நானும் ஹொஸ்பிற்றலுக்குப் போகத்தான் வெளிக்கிடுறம். நீ கம்பசுக்குப் போட்டுவா. ஹரி பல்கலைக்கழகம் சென்று வீடு திரும்பினான். ஹரியினுடைய அப்பா "மகன் அம்மாவைக் ஹொஸ்பிற்றலல மறிச்சுட்டாங்க" "அவவுக்கு இரத்தம் ரெஸ்ற் பண்ண வேணுமாம்" "அப்படியாப்பா சரி நான் போய் அம்மாவைப் பார்த்திட்டு வாறன்". "சரி ஹரி எங்களிட்ட எதுவும் சொல்றாங்க இல்ல நீயாவது சரியான விசயத்தை கேட்டுப் பார்" "சரியப்பா" ஹரி வைத்திய சாலைக்குப் போனான். தாயிடம் அவரது நோயைப்பற்றி விசாரித்தான். ஆனால் அவரோ தன்னிடம் அவர்கள் எதையும் சொல்லுவதாக இல்லை என்றும் இப்பத்தான் கொஞ்சநேரத்துக்கு முன்னம் இரத்தம் எடுத்துட்டுப் போயிருப்பதாகவும் கூறினார். ஹரியினாலும் எதையும் அறிய முடியவில்லை. அவர்கள் இரத்தம் ரெஸ்ற் பண்ணித்தான் எதையும் கூறமுடியும் என்றனர்.

ஹரியினுடைய தாய்க்கு 5நாட்களாக சாதாரண காய்ச்சலாகத்தான் இருந்தது. ஆனால் இவர்கள் இங்கு கொண்டு வந்ததும் ரத்தம் ரெஸ்ற் பண்ணித்தான் எதையும் கூறமுடியும் என்றனர். அவனும் இப்போது பலவிதமான புதிய புதிய காய்ச்சல்கள் ஏற்படுவதால் அதுதான் சிறந்ததெனக்கருதி தனது தாய்க்கு ஆறுதல் கூறி விட்டு வீட்டுக்கு வந்துவிட்டான். இவன் பல்கலைக்கழகத்தில் ஃபைனல் இயர் படித்துக் கொண்டிருந்தான்.

மறுநாள் காலை வழக்கம் போல பல்கலைக்கழகம் செல்லும் போது அப்படியே ஹொஸ்பிற்றல் சென்று தாயையும் பார்த்து விட்டுச் சென்றான். இவன் தாய் மீது அளவுகடந்த அன்பு கொண்டவன். தாயும் இவன் மீது அளவு கடந்த பாசம் கொண்டிருந்தாள். ஹரி பல்கலைக்கழகத்திலிருந்து மூன்று மணி போல வைத்தியசாலைக்குச் சென்றான். அங்கே அவனுடன் படித்த அவனுடைய நெருங்கிய நண்பன் விஜி விஞ்ஞானத் துறையில் கற்றவன். அவன் வைத்தியசாலையில் வைத்தியர்களின் பயிற்சிக்காக அங்கு வந்திருந்தான். அவனைக் கண்ட ஹரி அவனிடம் சென்று தனது தாய்க்கு ஏற்பட்டிருக்கும் நோய் பற்றி விசாரித்தான். அப்போது விஜி ஹரியிடம் ஒரு நிமிடம் பொறுத்து இருக்கும்படி கூறிவிட்டு தாயின் பிளட் றிப்போர்ட்டை எடுத்து வந்தான்.

அவன் அதிர்ச்சி அடைந்து விட்டான். "என்ன ஹரி. அம்மா மேல இவ்வளவு அக்கறை இல்லாம இருந்திட்டீரே? ஆ. அவங்க பிளட்டில் 450 வீதத்திற்கு மேல சுகர் இருக்கு இவ்வளவு கவனயீனமா இருந்திருக்கிறீரே? உன்ர படிப்பில இருக்கிற அக்கறை கூட உன்ர அம்மா மேல இல்லாமப் போச்சே என்றான்.

ஹரி அதிச்சியில் உறைஞ்சு போனான். அவனது தலையில் யாரோ பத்துப் பேர் சேர்ந்து ஒரு பெரிய பாறாங்கல்லைத் தூக்கிப் போட்டது போலிருந்தது. ஏனெனில் அவனது தாய்க்கு நீரிழிவு நோய் என்ற ஒன்றே இல்லை "இவனென்ன அப்பிடிக் கூறுகிறான்" என எண்ணி அவன் ஆடிப்போய் விட்டான்.

என்ன விஜி சொல்றீர்? அம்மான்ட பிளட்டில் 450% ற்கு மேல் சுகர் இருக்கா என்னால நம்பவே முடியேல்ல நான் பிறந்து வளர்ந்ததில அம்மாவுக்கு நீரிழிவு நோயே இல்லை.

"நீ இப்பிடிச் சொல்லுறியே சும்மா காய்ச்சல் எண்டு கொண்டந்தா ரத்தத்தில சுகர் எண்டு சொல்லுறியள்"

ஹரி என்ன சொல்லுறாய் உங்கம்மாவுக்கு நீரிழிவு நோயே இல்லையா? அப்ப இந்த றிப்போர்ட்? இந்த முடிவு? கொஞ்சமிரு ஹரி வர்றன்" என்று கூறிய விஜி டொக்டரிடம் ஓடிச் சென்று விடயத்தைக் கூறினான். டொக்டர் திகைச்சுப் போனார். ஏனெனில் அவர் ஹரியின் அம்மாவிற்கு நீரிழிவு நோயென நான்கு தடவைகள் இன்சுலின் ஊசி மருந்தினை ஏற்றிவிட்டார். அவர் ஆராய்ந்து பார்த்தால் ஹரியினுடைய அம்மாவின் பெயரில் இன்னொரு பெண்ணும் இங்கு வந்திருந்தார். உண்மையிலேயே அவருக்குத்தான் நீரிழிவு நோய். ஆனால் றிப்போர்ட் மாற்றி வைக்கப்பட்டதால் ஹரியினுடைய அம்மாவிற்கு நீரிழிவு நோயென நான்கு தடவைகள் இன்சுலின் ஏற்றப்பட்டு விட்டது. இதற்கிடையில் ஹரியின் அம்மாவினுடைய நிலை கவலைக்குரியதாயிற்று.

அவர் கோமா நிலையினை அண்மித்துக் கொண்டிருந்தார். சில மணிநேரத்தின் பின் பூமகளால் வாய் பேசமுடியவில்லை. அவள் பேச்சற்றுக் கிடந்தாள். அதனைப் பார்த்த ஹரி தரையில் புரண்டு அழுதான். அரற்றினான். கதறினான். விம்மிவிம்மி சிறு குழந்தையைப் போல அழுதான்.

இது இவ்வாறிருக்க ஏற்கனவே பூமகளுக்கு இன்சுலின் ஏற்றிய டொக்டர் தன்னால் எதுவும் செய்ய முடியவில்லையென வேறு ஒரு டொக்டரிடம் மாற்றி விட்டார். அந்த டொக்டரோ ஒரு சிறிய சத்திரசிகிச்சை பண்ணினால் உமது அம்மாவைக் காப்பாற்ற வாய்ப்பு உண்டு எனக் கூறினார். அதற்கு ஒரு பத்திரத்தில் கையெழுத்திடச் சொன்னார். ஆனால் தனது தாயினுடைய நிலையைப் பார்த்து எப்படியாவது அவர் பிழைத்து விடுவார் என்ற நம்பிக்கையில் ஒருவாறு தன்னைச் சமாதானப் படுத்திக் கொண்டு அந்தப் பத்திரத்தில் கையெழுத்திட்டான் ஹரி.

அந்த டொக்டரும் ஏனைய சிலரும் அவனது தாயாரை சரியாகப் பத்து மணிக்கு சத்திரசிகிச்சை தியேட்டரிற்குள் கொண்டு சென்றனர். பின் பத்தரை மணிக்கு வெளியே கொண்டு வந்தனர். சரியாக அரை மணித்தியாலம் ஆப்ரேசன் செய்துவிட்டுக் கொண்டு வந்தனர். அவன் ஆப்ரேசன் செய்தால் தனது தாய் பிழைத்து விடுவார் என்று நினைத்தான் ஆனால் அவன் நினைத்ததற்கு எதிராகவே எல்லாம் நடந்தது. ஆம் அவனது தாய் சில நிமிடங்களின் பின் எந்த ஆட்ட அசைவுமின்றிக் கிடந்தார். இதை அறிந்த ஹரி திகைத்துப் போனான். அவனால் எதுவுமே செய்ய முடியவில்லை. தனது தாயின் நிலை இப்படியாகிவிட்டதே என்று தன்னிலை இழந்து கதறினான். தான் உயிரையே வைத்திருந்த தனது தாய் இவ்வளவு சீக்கிரத்தில் தன்னை விட்டுப் போவாரென அவன் எதிர்பாக்கவேயில்லை. அதனால் அவனால் எதுவுமே செய்ய முடியவில்லை.

நம்பிக்கையுடன் காத்திருந்த அவனுக்கு. கண்முன்னே கனவுகள் யாவும் நொருங்கிச் சிதறியதான வெறுமையில் அவன் அழுது புலம்பியபடியிருந்தான். அவனால் இனி என்ன செய்ய முடியும்???

ட.சிந்துஜா
கலை 2010

## இரண்டு வருடத்தில் 25 மாணவர்கள் உயர்கல்வி வாய்ப்பு

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி தனது 80 வது அகவையில் கால்பதித்துள்ள இவ்வாண்டில் 2008 ம் ஆண்டு உயர்தர வகுப்பு மாணவர்களில் 12 மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கும், கல்வியியற்கல்லூரிகளுக்கும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். கடந்த வருடம் 13 மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு தெரிவுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலைமுகம்




சிறுதுளிகள் பெருவெள்ளமாவது போல திருமறைக் கலாமன்றத்தினரால் தமிழின் தாகம் தீர்க்க வெளியிடும் சஞ்சிகை இந்த "கலைமுகம்". வாழ்வின் முதல் நாள் போல் தை 2009 தனது 49 ஆவது பிரசவமான கலைமுகத்தை இம்மன்றம் பிரசவித்துள்ளது. மாதுளையோ ஒன்று தான் ஆனால் முத்துக்களோ பல அதே போல் சஞ்சிகையோ ஒன்று தான் ஆனால் அதில் சுமந்து வரும் விடயங்களோ பல

முல்லை முகாரிகளுடன் திறந்து காலப் பதிவுகளுடன் மூடிக் கொள்கிறது கலைமுகமாளிகை. தவிர்க்கப்படாத கவிகளின் சுவைகளை புதிய புதிய கலைஞர்களுடனும் ஈழத்து நவீன கவிதையில் தா.இராமலிங்கத்தின் வகிபாகத்தையும் சுவைபட சமைத்து வைத்திருப்பதென்றால் புசிக்கத்தான் வேண்டும்.

துவாரகனது கவிதைகள் உண்மையின் தன்மைகளையும் கத்திவிளிம்பில் நடக்கும் மனித வாழ்வின் துயரங்களையும் கூறிட்டு காட்டுகின்றது. கல்விக்கு அத்திவாரக்கல் கலைமுகம் என்பதை தலை நிமிர்த்திக்காட்டுவதற்கு "ஒரு பாவையின் வீடு" நாடகத்தின் குறிப்புக்களை தன்னகத்தே தாங்கி வந்துள்ளது.

கலைகளைத் தாங்கிய இதழ்களை காரிருள் சூரியனைப்போல அறிமுகப்படுத்தி கலை அழகை சேர்த்திருக்கிறது. வானவில்லின் கலைப் பயணத்தையும் சேரித்திரையின் ஓவியத்தையும் இங்கே கலைமுகம் உயிரளித்து பரிசளிக்கின்றது.

கணணியின் தமிழ் பரம்பரை தமிழ் இலக்கண வடிவத்தோடு ஒளி கொடுக்கிறது. அத்தோடு துளிர் விடும் முதல் இதழான சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் முகிழினை தனது பிரசவத்தில் அறிமுகப்படுத்துகின்றது. எண்பது வருடங்களுக்குப் பின் ஒரு மழை நாள் யாழ்குடாநாட்டினை நாட்டிய மேடையாகக்கொண்டு தனது தாண்டவத்தை அரங்கேற்றிய நிஷாவை கண்ணீர் கலந்த கவலைகளுடன் கதறித் தெரிவிக்கிறது.

பல்வேறுபட்ட மொழி பெயர்ப்புக்களையும் வாழ்வில் நிதர்சனமான சிறுகதைகளையும் தனது திருமறைக் கலாமன்றத்தின் கடல் கடந்த கலைப்பயணங்கள் - 08 னை சுவைபடக் கூறுகிறது. கலைமுகம் ரசிகர்களின் கடிதங்களையும் சமூகத்திற்கு எடுத்துக்காட்ட தவறவில்லை. இவ்வாறான தங்கச் சுரங்கத்தின் இருப்பிடமே நமது கலைமுகம். காலத்தால் கண்டறியாத விடயங்களை கனிகளின் இனிமை போல என்றும் கலைகளை சுமந்துவர வாழ்த்துக்களைத் தெரிவிப்போம்.

நா.ஜெயந்தினி
A/L 2011

## "இப்படியாயிற்று நூற்றியோராவது தடவையும்"

"இப்படியாயிற்று நூற்றியோராவது தடவையும்" என்ற ந.சத்தியபாலனுடைய கவிதைத் தொகுப்பு முயற்சியானது வரவேற்கத்தக்கவருகையாகும். இவருடைய கவிதைத் தொகுப்பானது அம்பலம் குழுமத்தினரால் வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்நூல் 43 கவிதைகளை உள்ளடக்கி 65 பக்கங்களில் வெளிவந்துள்ளது. இக்கவிதைகள் தனிமனித உணர்வுகளையும், அரசியல் நெருக்கடிகளையும் தம்மகத்தே சுமந்துள்ளன.



(கவிதைத்தொகுப்பு)

"ஊற்றுக்கண்ணில் விஷம்
ஆவலாய் அணைந்த மழலை
மடியிலேயே சுடுகிறது பிணமாய்
..........................................
அனைத்தினாலும் கைவிடப்பட்ட
மனிதன்
திசையிழந்து அலைந்தலைந்து
இடுகின்ற ஓலம் வியாபிக்கின்றது
எங்கும்

மேற் கூறப்பட்ட கவிதையடிகளினூடாக மனிதர்களுடைய துக்கம் கலந்த பயங்கரம் யதார்த்தத்துடன் உணர்வு பூர்வமாக வெளிப்படுத்தப் பட்டிருப்பதைக் காணலாம். அத்துடன் சில இடங்களில் கவிஞர் மௌனத்தின் வெளிப்பாட்டைத் தத்துரூபமாக வெளிக்காட்டியுள்ளமை சிறப்பாக நோக்கத்தக்கதாகும்

"உரிய திசையின்
இடமே
வெறுமையாய் எஞ்ச
எனது சொற்களின்கதி
இப்படியாயிற்று
நூற்றியோராவது தடவையும்

படைப்பாக்கம் மக்களிடையே குறைந்துள்ள காலத்தில் சத்தியபாலன் அவர்களின் கவிதை நூலின் வருகை ஒவ்வொரு வரையும் வளர்க்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. இப்படைப்பிற்கான அட்டைப்படமும் பார்ப்பவர்களை அதிர்ச்சியுடன் உள்ளே அழைத்துச் செல்வதாய் உள்ளது.

ப.கௌதமி
A/L 2010

## கல்லூரி ஆசிரியப் பூங்கொத்தில் இரு மலர்கள்

### திருமதி.புஸ்பராணி இராஜலிங்கம் அவர்கள்

ஈழவள திரு நாட்டின் வடக்கே அமைந்த யாழ்ப்பாணத்தில் வலி.தென் மேற்கில் ஆலங்குழாயை பிறப்பிடமாகக் கொண்ட புஸ்பராணி இராஜலிங்கம் ஆசிரியரின் சேவை மிளிர்ந்த பல இடங்களில் யா/சண்டிலிப்பாய் இந்து அன்னையையும் சிறப்பான ஓர் இடமாக குறிப்பிடலாம்.

இவர் தனது ஆரம்பப்பணியை கிளி/உருத்திரபுரம் மகா வித்தியாலயத்திலும் தொடர்ந்து கிளி/இந்து மகா வித்தியாலயத்திலும் அதை தொடர்ந்து யா/சண்டிலிப்பாய் இந்து மகாவித்தியாலயத்திலும் நிறைவேற்றினார். பின் இடப்பெயர்வின் போது கிளி / புனித பத்திமா றோ.க வித்தியாலயத்திலும் கல்வி கற்பித்து 01.07.1997 தொடக்கம் எமது கல்லூரியில் இணைந்து கொண்டார்.

ஆரம்பத்தில் தமிழ், சமூகக்கல்வி ஆகிய பாடங்களை கற்பித்த இவர் பின் புவியியல், வரலாறு, குடியுரிமை ஆகியபாடங்களை கற்பித்தார். கல்லூரி பரீட்சைக்குழுவில் நீண்ட காலமாக பணியாற்றிய இவர் கணிப்பீட்டு இணைப்பாளராகவும் கடமையாற்றினார். கல்லூரி இணைப்பாடவிதான செயற்பாடுகளில் BAND வாத்தியக்குழுவிற்குப் பொறுப்பாக இருந்து பாடசாலை வைபவங்களின் போது அதைத்திறம்பட செயற்படுத்தி உதவினார்.

தமது ஆசிரிய சேவையில் நீண்ட காலமாக எமது கல்லூரியில் பணியாற்றிய இவர் தனக்கு எவ்வித இடர்கள் வந்த போதும் முகங்கோணாது சிரித்த முகத்துடன் அவற்றை எதிர் கொள்வார். மாணவர்களோடு அன்பாக பழகும் சுபாவம் கொண்ட இவர் அதிபர் ஆசிரியர்களோடும் அவ்வாறே பழகுவார். எச்சந்தர்ப்பத்திலும் கோபங்கொள்ளமாட்டார். சிறந்த ஆசிரியருக்குரிய பண்புகளைக் கொண்ட இவர் 31.03.2009 ல் ஓய்வு பெற்றார். சேவைக்காலத்தில் அவர் செய்த பணிகளைப் பாராட்டுவதோடு தனது ஓய்வுக்காலத்திலும் சகல பாக்கியங்களும் பெற்று சுகநலத்தோடு வாழ இறைவனை வேண்டுகிறோம்.

திருமதி.ச.சிவானந்தம் ஆசிரியை

### திருமதி.கேதீஸ்வரி தர்மசோதி அவர்கள்

கட்டுடை, மானிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி.கேதீஸ்வரி தர்மசோதி அவர்கள் எமது பாடசாலையில் 15.05.1989 தொடக்கம் 15.04.2008 வரை 19 வருடங்களாகக் கல்வி கற்பித்தார். இவரது சேவைக்காலத்தில் சிறந்த நிறைவான ஒரு ஆசிரியையாகத் திகழ்ந்தார்.

இவர் இக்கல்லூரியில் சங்கீத ஆசிரியையாகவும் சைவசமய ஆசிரியராகவும் கடமைபுரிந்தார் அது மட்டுமன்றி மாணவர்களைப் பல போட்டிகளிலும் பங்கு பற்றச் செய்து பரிசுகளையும் பெற வழிவகுத்தார். சகலகலாவல்லிமாலை, பண்ணிசை, தமிழ்த்தினம் ஆகிய போட்டிகளில் மாணவர்கள் பங்கு பற்ற வழிகாட்டினார்.

இவரது பணியில் குறிப்பாக சிந்துநடைக்கூத்தில் மாகாணமட்டம் வரை மாணவர்கள் தொடர்ந்து பங்கு பெற ஊக்கியாக இருந்தார். இவர் வலைப்பந்தாட்டம், சிந்துநடைக்கூத்து ஆகியவற்றுக்கு பல வருடங்களாக உதவிகள் புரிந்தார். மாணவர்களைக் கட்டுப்பாடாகவும் அன்பாகவும் ஒழுக்கமுடையவராகவும் வழி நடத்துவதில் முன் மாதிரியாகத் திகழ்ந்தார்.

அதிபர், பிரதிஅதிபர், உபஅதிபர், ஆசிரியர்கள் அனைவருடனும் மென்மையாகவும் அன்பாகவும் பழகுவார். இவர் ஒரு நல்லாசிரியராகக் கடமை புரிந்து 12.04.2008 இல் ஓய்வு பெற்றார். இவரது சேவைக்காலம் மிகவும் உன்னதமானதாகும். இவர் தமது ஓய்வுக்காலத்தில் நிறைவான வாழ்வை வாழ வேண்டுமென வாழ்த்துகின்றோம்.

திருமதி.ச.பாலசுந்தரம் ஆசிரியை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலைகளின் உதயம்

ஆதிகால மனிதன் பேசத்தெரியாத போது தனது கருத்துக்களைப் பரிமாற்றிக்கொள்வதற்கு சைகைகளை பயன்படுத்தினான். அவன் மற்றைய விலங்குகளைப் போலவே தன் உணர்வுகளை வெளிப்படுத்த வாயினால் ஒலிகளைப் பயன்படுத்தியும் துள்ளிக் குதித்தும் கைகளைத்தட்டியும் செயற்பட்டான். அவன் சத்தம் போட்டதிலிருந்து மொழி தோன்றியதெனக் கூறுவர். மனிதனுக்கு சந்தோஷம் ஏற்படும் போது அவன் துள்ளிக் குதித்து மகிழ்ச்சியை வெளிப்படுத்தினான். கோபம் வரும் போது கடுமையான குரலில் கத்துவான். மனிதனின் ஒவ்வாரு உணர்வையும் வெளிப்படுத்தும் போது தனது உடல் முழுவதையும் பல விதமாக அசைத்தான். சந்தோஷம் நிறையும் போது மனிதன் கூச்சலிட்டு கைதட்டி ஆடிப்பாடினான். அவன் கைகளைத் தட்டியது தாளமாகவும், கூச்சலிட்டது இசையாகவும், துள்ளிக்குதித்தது ஆடலாகவும் மலர்ந்தது.

மனித நாகரிகம் வளர வளர அவனது ஆடல் பாடல்களும் வளர்ச்சியடைந்தன. மனிதனின் அறிவு வளர்ச்சியினால் அவன் கைகளைத் தட்டிய போது பிறந்த தாளம் பல வகைகளில் விரிவு பட்டு வளர்ந்துள்ளது. பாடல் அல்லது நாட்டிய ஜதிகளின் காலப்பிரமாணத்தை அல்லது வேகத்தை சீராக கொண்டு செல்வதற்கு தாளம் உதவி புரிகின்றது. தாளத்தை கையினாலோ, கருவிகளாலோ வெளிப்படுத்த முடியும். தாளம் தேவைக்கேற்ப பயன்படக் கூடிய வகையில் விரிவாக்கப்பட்டுள்ளது. அவன் கூச்சல் இட்ட போது தோன்றிய இசை கால வளர்ச்சியில் பல்வேறு வகைகளில் விரிவுபட்டுள்ளது. இசை, சுருதி, லயம் என்பவற்றிற்கு முக்கியத்துவம் கொடுப்பவரின் கற்பனையால் விரிவு படுத்தப்பட்டு ஜனரஞ்சகமானதாகிறது. அவன் குதித்தாடிய போது ஏற்பட்ட உடல் அசைவுகள் செம்மைப்படுத்தப்பட்ட நாட்டியமாக மலர்ந்துள்ளது. உடல் அசைவுகள் உடலிலுள்ள அங்கங்கள் அனைத்திற்கும் விரிவுபடுத்தப்பட்டு அவற்றின் கட்டுக்கோப்பான அசைவுகளாக நாட்டியத்தில் பயன்படுகின்றன.

சி.காயத்திரி
தரம் -10B




இலங்கைச் சுற்றாடல் அதிகார சபையினால் வருடந்தோறும் நடாத்தப்படும் ஆரோக்கியமான சிறந்த சுற்றாடலைக் கொண்ட பாடசாலையைத் தெரிவு செய்யும் செயற்பாட்டில் 2008ம் ஆண்டில் யாழ்ப்பாண மாவட்டத்தில் எமது கல்லூரி முதலாவது இடத்தைப் பெற்றுக் கொண்டது. 2007ம் ஆண்டில் இரண்டாம் நிலையைப் பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

## ஓ மனிதனே

நீ எங்கே போகிறாய்?.
காலையில் மலர்ந்து மாலையில் உதிரும்
மலராய் வாழ்கிறாய்!
மண்ணில் பிறந்த மானிடனே - நீ
மண்ணுக்கே திரும்புவாய்!
மரணம் உன்னை நெருக்கும் போது
எங்கே ஓடுவாய்?.
பாவியாய்ப் பிறந்த மானிடனே நீ
பாவியாய் மரிக்கின்றாய்.
உன்னை நீயே உணர்வது எப்போது?.

ஜெ.பிரபாலினி
தரம்-11B

## நாளைய உலகு நம் கையில்



புது உலகைப் படைக்க
புறப்படுவோம்.....!

யுத்தம் இல்லா புது
உலகில் - இனி
புதுமைகள் பல செய்திடப்
புறப்படுவோம்.....

பள்ளி செல்லும்
பாலகர்கள் நாங்கள்
படிப்பினை நன்றாய்
கற்றிடுவோம்....

ஊடகம் கணனி
என்றெல்லாம் - இனி
சாதனை பலவும்
செய்திடுவோம்.....

நாளைய உலகை
வென்றிடவே நன்றாய்
நாங்கள்
உழைத்திடுவோம்.

இ.நவநீதன்
தரம் -10B

## சமாதானப் பெண்ணே



அல்லல்களும்
அடிமைத்தனமும்
அகன்றோடிட.....
இன்னல்களும்
இம்சைகளும்
இல்லாமற் போக....
நீ வர வேண்டும்
சமாதானப் பெண்ணே.......

துன்பங்களும்
துயரங்களும்
துவண்டு போக
விரிசல்களும்
விரைந்தோடிட
நீ வர வேண்டும்
சமாதானப் பெண்ணே......

வன் முறைகளும்
வசை மொழிகளும்
வகையிழந்து போக
கொள்ளைகளும்
கொலைகளும்
கெட்டழிந்து போக
நீ வர வேண்டும்
சமாதானப் பெண்ணே.......

உரிமைகள் கிடைக்கவும்
சுதந்திரம் நிலவவும்
இன, மத, மொழி வேறுபாடு நீங்கி
சமத்துவம் மலரவும்
விரைந்து எம்மிடம்
நீ வர வேண்டும்
எங்கள் சமாதானப் பெண்ணே........

இ.டயானா
2010 கலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org